(ஆ) உறுப்பினர் அவையில் இல்லாதபோது அவரது வினாவிற்கு அளிக்கப்பெற்ற விடை குறித்து.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்ட ஒரே ஒரு கேள்வி இடம் பெற்றது. துரதிருஷ்டவசமாக, நம் அவை முன்னவர் அவர்கள் அவை நடவடிக்கை சம்பந்தமாக என்னை திடீரென்று அழைத்தார், போய்விட்டேன். கேள்வி வந்து விட்டது. அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது, இராஜபாளையம் நகராட்சியில் குடியிருப்புப் பகுதியிலே பெரிய தனவந்தர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அது கூட சிறப்பு அதிகாரிகளால் வழங்கப்பட்டிருக்கிறது, மக்கள் பிரதிநிதிகளால் அல்ல, சிறப்பு அதிகாரிகள் இப்படி சிறப்பில்லாத வேலைகளைச் செய்து விடுகிறார்கள் என்ற காரணத்திற்காக....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஏற்கனவே முடிந்து போன பிரச்னையைத் திருப்பியும் கிளப்புவதற்கு நீங்கள் அனுமதிக்கிறீர்களா?

திரு. க. சுப்பு : விதி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி இருப்பதாலேயே பேரவைத் தலைவர் அனுமதிக்க வேண்டும் என்று யாரும் அவரைக் கட்டாயப்படுத்துவதற்கு இல்லை. பேரவைத் தலைவர் அனுமதிப்பதோ, அனுமதி மறுப்பதோ அவரது டிஸ்க்ரிஷனைப் பொறுத்தது. திரு. சுப்பு அவர்களது கேள்வி காலையில் வந்த போது, அவர் கேள்வி நேரத்திலே, தம் இடத்தில் இல்லை. அவர் தம் கடமையாற்றாமல் வெளியே போனது அவரது தவறு. அதற்காக இப்போது அவையின் நேரத்தை வீணாக்க வேண்டாம். பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று மட்டும் சொல்லுங்கள்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, கடமையாற்றாமல் போகவில்லை. இங்கே நோட்டீஸ் கொடுத்தது சம்பந்தமாக, லீடர் ஆப் தி ஹவுசைச் சந்திக்கச் சென்றேன்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எனக்குத் தெரியாது. அவையிலே இருக்கின்ற உறுப்பினர், அந்த நேரத்தில் கடமையை ஆற்றியிருக்க வேண்டும்.

திரு. க. சுப்பு : சரி, பிறகு 1/2 மணி நேர டிஸ்கஷனுக்கு எழுதிக் கொடுக்கிறேன். நீங்கள் அனுமதி கொடுங்கள். அதை டிஸ்கஸ் செய்து விடுவோம். தலைவரவர்களே நான் ஒரு உரிமை மீறல் பிரச்சனையை நம்முடைய அவை முன்னவருக்கு எதிராக எழுதிக் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்த உரிமை மீறல் பிரச்சனை என் ஆய்விலே இருக்கிறது. உங்களுக்குத் தெரிந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் எனக்கும் ஓரளவு தெரியும். அதை அவை நடந்து கொண்டிருக்கும்போது கொடுத்தீர்கள். அதை விட்டு விட்டு வேறு ஏதாவது இருந்தால் எழுப்புங்கள்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அதை இன்று எழுப்பினால் பதில் சொல்வதாக லீடர் ஆப் தி ஹவுஸ் ஒப்புக் கொண்டிருக்கிறார். இன்று எழுப்பச் சொல்லி இருக்கிறார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, அவர் என்னிடம் கேட்டதாகவும், நான் அனுமதி வழங்கியதாகவும் சொல்லுகிறார். அனுமதி வழங்கும் உரிமை எனக்கு இல்லை. அது உங்களுக்குத்தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆம்.

திரு. க. சுப்பு : இன்றைக்குத்தான் அவர் வந்துவிடுவாரே, அதுதான் பிரச்சனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரவாயில்லை. உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : அந்த நோட்டீசை வாசித்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறையிலே போய்த்தான் படிக்க முடியும். இங்கே வேறு அலுவல்கள் இருக்கின்றன.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாக மிகவும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சனை குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி விட்டு, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை என்றெல்லாம் ஏதோ ஒழுங்குப் பிரச்சனை போல் சொல்கிறீர்களே, சுருக்கமாக உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, கேரளாவிலே பெரியார் டாமிலே லீக்கேஜ் ஏற்பட்டு மிகப் பெரிய ஆபத்து ஏற்பட்டு இருப்பதாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அதைப் பற்றி கேரள அசெம்பிளியிலே விவாதம் நடந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப் பெற்றுள்ளது. அதன் மேல் ஒரு அறிக்கையை அவையில் வைக்க அரசு இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, கேரள முதல் அமைச்சர் முகமது கோயா அவர்கள் கேரள அசெம்பளியிலே தெரிவித்திருக்கிறார்கள், இது சம்பந்தமாக தமிழ்நாடு அரசுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம், அவர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும், ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லி இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் ரகுமான் கானை விட அதிக அக்கறை அரசுக்கு இதிலே இருக்கிறது. அமைச்சரவர்கள் விவரங்களைச் சேகரித்து விரைவிலே வைக்க இருக்கிறார்கள். அதை மேலும் துரிதப்படுத்த வேண்டுமென்று உறுப்பினர் விரும்புகிறார் என்று நினைக்கிறேன். அதற்கு நன்றி.

திரு. ரா. கிருஷ்ணன் : எம்.எல்.ஏ.க்கள் விடுதியிலே ஃபோன் எப்பொழுது பார்த்தாலும் "அவுட் ஆப் ஆர்டர்" ஆக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுதிக் கொடுங்கள்.

Thiru. K. Suppu : Sir, I raise on a point of order. Under Rule 184 of the Tamil Nadu Assembly Rules, a Member wishing to raise a matter privilege shall before the commencement of the sitting of the day......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வேகமாகப் படித்து விட்டால் எனக்குத் தெரியாது என்று நினைக்காதீர்கள். அது "பிபோர் தி கமென்ஸ்மென்ட் ஆப் தி ஹவுஸ்". உட்காருங்கள்.

[முற்பகல் 10–20]

3. அறிவிப்புகள்.

அ. அலுவல் ஆய்வுக்குழுவில் ஓர் உறுப்பினர் நியமனம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை விதி 193 (1)-ன் கீழ், 1979–80-ம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக் குழுவில் திரு. துரை இராமசாமி அவர்களையும் உறுப்பினராக நியமிக்கிறேன்.